# சைவ சமயப் பண்டிகைகள்



குமார்: ரமேஸ் சைவ சமயத்தவர்கள் அதிகமான பண்டிகைகளைக் கொண்டாடுவதாகக் கேள்விப்படுகிறேன். என்ன, என்ன பண்டிகைகளைக் கொண்டாடுகிறீர்கள் என்று எனக்குக் கூறமுடியுமா?

ரமேஸ்: சைவசமயத்தவர்களாகிய நாங்கள் பல பண்டிகைகளைக் கொண்டாடுகிறோம்.

குமார்: நீங்கள் எந்த எந்தப் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடுகிறீர்கள்.

ரமேஸ்: நாங்கள் தைப்பொங்கல், புது வருடப்பிறப்பு, தீபாவளி, நவராத்திரி ஆகிய பண்டிகைகளை சிறப்பாகக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு பண்டிகைக்கும், தனித்தனிப் பின்னணிகள் உண்டு.



குமார்: அப்படியா! தைப்பொங்கலை எதற்காகக் கொண்டாடுகிறீர்கள். அன்றைய தினம் நீங்கள் விசேடமாக உண்ணும் உணவு என்ன?

ரமேஸ்: தைப்பொங்கல் உழவர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகக் கொண்டாடுவதாகும். மாரி நீங்கிக் கோடை பிறப்பதை இப் பண்டிகை உணர்த்துகிறது. அதனால்தான் தைபிறந்தால் வழி பிறக்கும் என எமது பெரியோர்கள் கூறுவர். அன்றைய தினம் வீட்டை அலங்கரித்துப் புதுப்பானையில், புத்தரிசியிட்டுச் சர்க்கரைப் பொங்கல் செய்வோம். பின்பு சூரியனுக்குப் படைத்து அனைவரும் உண்டு மகிழ்வோம்.

குமார்: இதை உழவர்கள் தினம் என்றும் கூறலாம் அல்லவா? ஆனால் விவசாயிக்கு உதவும் மாடுகளுக்கு ஏதாவது செய்வதுண்டா?

ரமேஸ்: நல்ல கேள்வி கேட்டாய். தைப்பொங்கலின் அடுத்த நாள் மாடுகளுக்கு என ஒரு கொண்டாட்டத்தை நடாத்துகின்றோம். அது மாட்டுப்பொங்கல் எனப்படும். மாடுகளை நீராட்டிப் பொட்டிட்டு மாலை அணிவித்து பொங்கல், பழம் என்பவற்றை உண்ணக் கொடுப்போம்.

குமார்: கேட்கவே மகிழ்ச்சியாக உள்ளது. அப்படியானால் புதுவருடத்தையும் இப்படிக் குதூகலமாக நீங்கள் கொண்டாடுவீர்களா?

ரமேஸ்: எல்லாச் சமயத்தவர்களும் புதுவருடத்தைக் கொண்டாடுகிறார்கள்தானே! அதைப்போன்றே நாமும் எமது புதுவருடத்தைச் சித்திரை மாதம் முதலாம் திகதி கொண்டாடுகிறோம்.

குமார்: அன்றைய தினம் என்னென்ன விடயங்களை விசேடமாகச் செய்கிறீர்கள்.

ரமேஸ்: அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து மருத்து நீர் தேய்த்து நீராடுவோம். புத்தாடை அணிந்து பெரியோர்களின் ஆசி பெறுவோம். விதவிதமான தின்பண்டங்களை உண்ணுவோம். கைவிசேடம் பெறுவோம், கோயிலுக்குச் சென்று வழிபடுவோம். உறவினர்களின் வீட்டுக்கு விருந்தினர்களாகச் செல்வோம். வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வரவேற்போம்.

குமார்: நாங்களும் அப்படித்தான் கொண்டாடுகிறோம். புது வருடத்தையொட்டி நாங்கள் பல போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துவது வழக்கம்.

ரமேஸ்: நாங்களும் அப்படியேதான். பல போட்டி நிகழ்ச்சிகளிலும் கலை நிகழ்ச்சிகளிலும் ஈடுபடுகின்றோம்.

குமார்: தீபாவளியை எதற்காகக் கொண்டாடுகிறீர்கள்.

ரமேஸ்: தீபாவளியா? அது மகாவிஷ்ணு நரகாசுரனை அழித்து மக்களின் துன்பங்களை நீக்கிய தினம். அதன் நினைவாகவே நாம் தீபாவளியைக் கொண்டாடுகிறோம்.

குமார்: நல்லது ரமேஸ். சைவ சமயக் கொண்டாட்டங்களின் அடிப்படையான சில தகவல்களை நான் அறிந்து கொள்ள உதவியமைக்காக நன்றி கூறுகிறேன்.

**எமது பண்பாடுகளைப் பாதுகாப்போம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) தைப்பொங்கல் எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
(2) மாட்டுப்பொங்கல் என்றால் என்ன?
(3) புதுவருடத் தினத்தன்று மேற்கொள்ளும் சில கருமங்கள் கூறுக.
(4) தீபாவளி எதனை நினைவு கூருமுகமாகக் கொண்டாடப்படுகிறது?
(5) சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் பண்டிகைகளைக் கூறுக.

## செயற்பாடு

* ஏதாவதொரு கொண்டாட்டத்திற்கு உங்கள் நண்பர்களை உங்கள் வீட்டிற்கு அழைத்து விருந்துபசாரம் செய்யுங்கள்.

* ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் வகுப்பறையில் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து ஏதாவது ஒரு பண்டிகையை முறைப்படி கொண்டாடுங்கள்.